செய்தி வெளியீடு எண்: 409 02.11.2007

<u>செய்திக் குறிப்பு</u>

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம் மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் நகராட்சி/ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் அரசாணை எண் 212 நிதி (ஓய்வூதியம்) நாள் 24.5.01ன்படி தங்கள் வாழ்வுச் சான்றிதழை (Life Certifcate) ஒவ்வொரு ஆண்டும் ஜுன் திங்களுக்குள் அனுப்ப வேண்டும். ஆனால் நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி ஓய்வூதியதாரர்களில் பெரும்பான்மையானோர் வாழ்வுச் சான்றிதழை இதுகாறும் இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை 600 108 அலுவலகத்திற்கு அனுப்பாமல் உள்ளனர். எனவே இதுவரை வாழ்வுச் சான்றிதழ் அனுப்பாத ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் வாழ்வுச் சான்றிதழை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசிதழ் பெற்ற அலுவலரின் அல்லது அவர்கள் ஓய்வூதியம் பெறும் வங்கி மேலாளரின் சான்றுடன் இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்திற்கு 30.11.2007–க்குள் தவறாமல் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

2/11/07

இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
சென்னை–108.